முற்பகல் 10-20. [1992 மார்ச் 16

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம் திருத்தணியில் உள்ள ஐயனேரியினுடைய மிகையான நீர் வெளியேறி அது நந்தியாறு என்று அழைக்கப்படுகிறது. நந்தி யாறு என்பது நம்முடைய தமிழ்நாட்டின் பகுதிகளிலே ஓடிக் கொண்டிருக்கின்ற ஒரு ஆறு. அது செங்கல்பட்டு— எம்.ஜி.ஆர். மாவட்டம், இராமநாதபுரம் கிராமத்தின் அருகே நகரி ஆற்றில் கலக்கிறது. நகரி ஆறு என்பது ஆந்திராவிலிருந்து உருவாகி நம்முடைய பகுதியிலே வந்து இந்த இரண்டு ஆறுகளும் ஒன் றாக சேர்ந்து நிறைந்து அதற்குப் பின்னாலே பூண்டி ரிசர் வாயருக்கு இந்தத் தண்ணீர் வந்து சேருகிறது. நம்முடைய தமிழ்நாட்டின் பகுதியான நந்தியாற்றின் குறுக்கே எந்த விதமான அணைகளும் கட்டப்படவில்லை. ஆனால் ஆந்திராவி லிருந்து வருகிற நகரி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே கிருஷ்ணா புரம் என்கிற இடத்திலே அணையைக் கட்டியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஆந்திராவின் பகுதியிலேயிருந்து நம் முடைய தமிழ்நாட்டின் பகுதிக்கு வருகிற நேரத்திலே அந்தப் பகுதியில் நாம் ஒரு ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய பகுதியிலே வருகிற நகரி ஆற்றின் குறுக்கே பாசனத் திற்காக ஒரு அணைக்கட்டு கட்டி, அதன் மூலம் நம்முடைய பகுதிகளுக்குப் பாசன வசதி செய்யலாமா என்று ஒரு ஆய் வினை பொதுப் பணித் துறை மேற்கொண்டிருக்கிறது. ஆந்திரப் பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற அணையினால் நமக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. அவர்கள் ஏற்கெனவே 15, 20 ஆண்டு களுக்கு முன்பாகவே அதைக் கட்டியிருக்கிறார்கள். நம்முடைய பகுதியிலே வருகிற அந்த நகரி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டு ஒன்று கட்டி நம்முடைய பாசன மேம்பாட்டிற்காக அதைச் செய்யலாமா என்று ஆய்வு மேற்கொண்டிருக்கிறோம். அதற்குரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக நந்தியாற்றின் குறுக்கே எந்தவிதமான அணையும் கட்டப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். நகரி ஆற்றின் குறுக்கே தான் இந்தப் பாசனப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு முனைப் பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 230 திரு. டி. எம். ரங்கராஜன் மற்றும் திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

230—

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.

*1196 திரு. டி. எம். ரங்கராஜன் :

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1992 மார்ச் 16]

(அ) கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் முதன் முதலாக எந்தத் தொகுதியில் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னையில் முன்னோடி திட்டமாக செயல்படுத்துவதற்கு சென்னைக் குடிநீர் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்கான இடத்தைத் தேர்வு செய்த பிறகு விரைவில் இந்தத் திட்டம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டத்திற்கு அதற்குரிய தொழில் நுட்பம் நம்முடைய மாநிலத்திலே கிடைக்கிறதா அல்லது வெளி நாட்டினுடைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த கடல் நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டத்திற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பம் நம்முடைய மாநிலத்திலேயே கிடைக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயே ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை தயாரித்து இருக்கிறோம். அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 231. திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

231—

அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

*3961 திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;